# காஞ்சி

ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை





# கீறல் விழுந்துவிட்டது!

மலர் 1 11—4—65 இதழ் 35

கேரளம் செல்கிறார் காமராஜர், காங்கிரசுக்கு வெற்றி பெற்றுக் காட்டுவார்.

கேரளம் இதுநாள் வரையில் எவருக்கும் புரியாத புதிராக இருந்துவந்தது; புறப்படுகிறார் காமராஜர், இனிப் புரிந்துவிடும் கேரள நிலை.

கேரளம், அவிழ்க்கப்பட முடியாததோர் சிக்கல் பிரச்சினை; ஆயினும் எந்தச் சிக்கலையும் தீர்த்துவிடும் திறமை மிக்க காமராஜர் செல்கிறார்.

மற்ற மற்ற தலைவர்கள்போல மணிமண்டபக் கூட்டங்களோடு வேலை முடிந்துவிட்டதாகக் கருதுபவர் அல்ல காமராஜர்; பட்டி தொட்டி எல்லாம் செல்கிறார்; பாமரர்கள் மத்தியிலே நடமாடுகிறார்; இனிக் காங்கிரசுக்குப் பயமில்லை.

தலைவர்கள் மூலைக்கு ஒருவராக இருக்கிறார்கள், அவர்களை ஒன்றுபடுத்திவைக்க லால்பகதூர் முயன்றார், முடியவில்லை; பட்டீல் சென்றார் பலிக்கவில்லை; இதோ செல்கிறார் காமராஜர் இனிக் கவலையில்லை, தலைவர்கள் ஒன்றுபடுவார்கள்; வெற்றி கிட்டும்; கொட்டிடலாம் முரசு!

சாக்கோ குழுவினருக்கும் காங்கிரசுக்கும் மூண்டுவிட்ட பகையைப் போக்கிட இதுவரை எவருமே முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை; காமராஜர் செல்கிறார், இனிப் போட்டிக் காங்கிரசை வழிக்குக் கொண்டு வந்து விடுவார்.

காங்கிரசின் தொண்டுகளைப் பாமர மக்கள் புரிந்துகொள்ளும்படிப் பேசக்கூடியவர்களாகத் தலைவர்கள் இல்லை; அந்தத் திறமை பெற்றுள்ள ஒரே தலைவர் காமராஜர் கேரளம் செல்கிறார்; இனி மக்கள் உண்மை உணர்ந்து காங்கிரசுக்கு ஓட் அளிப்பார்கள்.

காமராஜர் சென்றார், காங்கிரஸ் வட்டாரத்தில் புதிய முறுக்கு ஏற்பட்டுவிட்டது. காமராஜர் முயன்றார் சண்டமாருதம்போல் எதிர்ப்புக் கிளப்பிவந்த சாக்கோவின் உடன்பிறந்தவரையே காங்கிரஸ் வேட்பாளர் ஆக்கிவிட்டார்! என்னே அவருடைய ராஜதந்திரம்,

மன்னத்து முதியவர் நாயர் கழகத்தைக் காட்டி மிரட்டுகிறார்; காமராஜர் அந்த அமைப்பையே உடைத்துவிட்டார்; வேலாயுதம் நாயர் என்பவர் நாயர் கழகம் விட்டு வெளிவந்துவிட்டார், காங்கிரஸ் வேட்பாளர் ஆகிவிட்டார்! இது அல்லவோ தலைவரின் திறமை!!

காமராஜரின் பிரசாரம் வலுவடைய வலுவடைய, எதிர்க் கட்சிகள் திக்கா லொன்றாக ஓடித் திணறுகின்றன. கட்டுப்பாடுள்ள முஸ்லீம் லீகிலேகூடக் காமராஜரின் ஆதரவாளர் பகுதி ஒன்று அமைந்துவிட்டது.

நாளைக்கு நாற்பது கூட்டம்; போகாத இடமில்லை; போகும் இடமெல்லாம் அமோக ஆதரவு, உற்சாகமான வரவேற்பு.

தேர்தல் வேலை என்றால் அது காமராஜருடைய ஏகபோக உரிமை! அந்த வேலையில் அவருக்கு இணை அவரே!!

இவ்விதமும் இதற்கு மேலாகவும் புகழாரம் சூட்டினர் காமராஜருக்கு. அவரும் புயலெனச் சுற்றினார், மழை எனப் பொழிந்து தள்ளினார் பேச்சினை. பலன்? நாடு அறிந்துகொண்டது! காங்கிரஸ் தோற்றுவிட்டது. இவ்வளவுக்குப் பிறகும்! இவருடைய தனித் திறமை காட்டப்பட்ட பிறகும்.

காமராஜருக்கு ஒரு அழுத்தமான நம்பிக்கை வளர்ந்துவிட்டிருக்கிறது; தன்னால் தேர்தல் வெற்றியை உருவாக்கிட முடியும் என்பதாக. சாமரம் வீசிகளின் இச்சகப் பேச்சு இந்த அவருடைய நம்பிக்கையை வளரச் செய்தும் விட்டது. அதனால்தான் கேரளத் தேர்தல் முடிந்து சென்னை வந்தடைந்ததும், சூழ வந்து நின்ற செய்தியாளர்களிடம், கோளத்தில் காங்கிரஸ் வெற்றி நிச்சயம் என்று பிரகடனம் செய்தார். ஆனால்! தோல்வி துளைத்தது. காமராஜர் சென்றால் போதும் தேர்தலில் வெற்றி கிடைத்துவிடும் என்ற மூடநம்பிக்கை முறியடிக்கப்பட்டது.

கேரளம் அவ்வளவு சிக்கலும் குழப்பமும் நிரம்பிய இடம், பாவம், காமராஜர் மட்டும் என்ன செய்ய முடியும் என்ற இரக்கப் பேச்சு எழுந்தது. அவர் தம்மாலே

கூடுமானமட்டும் முயன்று பார்த்தார்; முடிந்தது அவ்வளவுதான்; அதற்கு அவர் என்ன செய்யமுடியும் என்று ஆதரவாளர் வாதாடலாயினர்.

துணிந்து எழுந்தார், விளைவு பற்றியக் கவலையற்று, பட்டீல்; கேரளத்தில் காங்கிரஸ் தோற்றதற்குக் காமராஜர் கையாண்ட முறைகளே காரணம் என்று கூறினார்.

பதறினர் சிலர்; இவ்வளவு பாடுபட்டுவிட்டு வந்த காமராஜருக்கு இப்படியா இடிகொடுப்பது என்று கடாவினர் சிலர்; பட்டீல் இப்படிப் பேசியிருக்கக்கூடாது என்று பேசினர் சிலர்; பட்டீல் தமது பேச்சை மாற்றிக் கொள்ளவுமில்லை; சமாதானம் தேடிக்காட்டவுமில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவருக்கு இழுக்குத் தேடிடும் விதமாகப் பேசலாமா என்று கேட்டனர்—உள்ளத்தில் பட்டதைச் சொன்னேன் என்றார் பட்டீல். வளையவில்லை, நெளியவில்லை.

கட்டுப்பாட்டைக் காப்பதில் வல்லவர், எத்தனை பெரியவராயினும் காங்கிரசின் ஒழுங்கைக் குலைத்திடின் காமராஜர் அத்தகையவர்களை விட்டுவைக்கமாட்டார்; அவருக்கு அமைப்பு பெரிது; தனி ஆட்கள் அல்ல என்றெல்லாம் பேசிடும் பக்கமேளங்கள் பட்டீலைச் சும்மாவிடக்கூடாது என்று உசுப்பிப் பார்த்தன. இந்த இடத்துடன் மோதிக்கொள்ளக் கூடாது என்று எண்ணிக்கொண்டார் போலிருக்கிறது காமராஜர்,பட்டீலின் பேச்சைக் கண்டிக்கவில்லை; மூச்சுப் பேச்சு இல்லை.

இப்போது, காமராஜர் சென்றும் கேரளத்தில் வெற்றி கிட்டவில்லையே என்ற பேச்சு, காமராஜர் சென்றதனால்தான் கேரளத்தில் காங்கிரஸ் தோற்றுவிட்டது என்ற நிலைக்கு வளர்ந்துவிட்டது.

பெங்களூரிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ் 'டெக்கான் எரால்டு', வெளியிட்டுள்ள டில்லிக் கடிதத்தில், கேரளத்தில் தேர்தல் தோல்வி மட்டுமல்ல, மொத்தத்திலேயே நிலைமை கெட்டுவிட்டதற்குக் காமராஜர்தான் காரணம் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கேரளத்தில், மந்திரி சபை அமைக்காமல், மீண்டும் 'ஜனாதிபதி ஆட்சி' ஏற்படுத்தப்பட்டிருப்பதேகூட, காமராஜரால்தான். இந்தியப் பேரரசு, எப்படி மறுபடியும் ஜனாதிபதி ஆட்சியைப் புகுத்த முடியும் என்று தயக்கம் காட்டியபோது, காமராஜர்தான் பிடிவாதமாக, கேரளத்தில் மந்திரி சபை அமைக்க விடக்கூடாது என்று கூறிவிட்டார், என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

ஏதாவது ஒரு முறையில் கேரளத்தில் மந்திரிசபை அமைய வழி கண்டாக வேண்டும் என்று மத்திய அமைச்சர்கள் முயற்சி எடுத்தபோது, இப்படி நீங்கள் செய்தால், காமராஜர் ராஜிநாமாச் செயதுவிடுவார் என்று உணவு அமைச்சர் சுப்பிரமணியமே மிரட்டினாராம்,

ஆகவே காமராஜரின் விருப்பத்துக்கு மாறாகப் போவானேன், அதனால் அவர் மனம் வெறுத்து ராஜிநாமாச்செய்து அதன்மூலமாகக் கட்சிக்குள் ஒரு நெருக்கடி மூளுவானேன் என்று எண்ணித்தான், லால்பகதூரின் அரசு, கேரளத்தில் ஜனாதிபதி ஆட்சியைப் புகுத்திவிட்டதாக 'டெக்கான் எரால்டு' வெளிப்படையாகவே எழுதிவிட்டிருக்கிறது.

தொடர்ந்து காமராஜர்தான், தமது நடவடிக்கைகளின்மூலம், கேரளத்து நிலைமையைக் கெடுத்துவந்திருக்கிறார் என்று அந்த இதழ் குற்றம்சாட்டியிருக்கிறது.

> கேரளத்தில் சங்கர் முதலமைச்சராக இருந்தபோது, அவர்மீது புகார்கள் கிளம்பி, விசாரணை நடத்தவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டபோது காமராஜர்தான் வேண்டுமென்றே, விசாரணை நடத்த முடியாது என்று கூறிவிட்டார். அதன் விளைவாகவே போட்டி காங்கிரஸ் உருவெடுத்தது, போட்டி காங்கிரசின் எதிர்ப்பு காங்கிரசை மண்கவ்வச் செய்தது, ஆகவே காங்கிரஸ் மண் கவ்வியதற்குக் காமராஜரின் போக்கே காரணம்,

என்று இடித்துரைத்திருக்கிறது இந்த இதழ்.

தேர்தலின்போது, காங்கிரசில் ஒரு பெரிய பகுதியினரின் வெறுப்புக்கு ஆளான சங்கரை, வேட்பாளர் ஆக்காமல் இருந்திருந்தாலாவது, தேர்தலில் காங்கிரசுக்கு இப்போது கிடைத்ததைவிட சற்று கூடுதலான ஆதாயம் கிடைத்திருக்கும். அதைக் கெடுத்ததும் காமராஜரே!

தேர்தல் முடிந்த பிறகும் வெற்றிபெற்ற போட்டிக் காங்கிரஸ் மந்திரிசபை அமைப்பதற்காக காங்கிரஸ் கட்சியுடன் ஒத்துழைக்கவும், நாளாவட்டத்திலே இணைந்துவிடவும் விருப்பம் தெரிவித்தபோது, காமராஜர்தான் முரட்டுத்தனமான போக்குடன் நடந்துகொண்டார்; முயற்சி முறிந்தது.

> ஆண்டால் சங்கர் ஆளவேண்டும்; இல்லையென்றால் கேரளம் ஜனாதிபதி ஆட்சியின்கீழ் வரவேண்டும்.

இந்தத் தவறான பிடிவாதம்தான் இன்று கேரளநிலைமை கெட்டதற்குக் காரணம். இதற்கு முழுப்பொறுப்பு ஏற்றுத்தீரவேண்டியவர் காமராஜரே! என்று அந்த இதழின் டில்லிக் கடிதத்தில் வெளிப்படையாகவே காணப்படுகிறது.

> சங்கர், காமராஜருக்கு மெத்த வேண்டியவர். எத்தனைபேர் எதிர்த்தாலும் சங்கரைத்தான் ஆதரிப்பேன் என்று காமராஜர் பிடிவாதம் பிடித்ததன் காரணமாகவே, கேரள அரசியல் நிலைமை பாழ்பட்டுவிட்டது.

இவ்வளவு வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் காமராஜர் இதுகுறித்து ஒரு வார்த்தையும் பேசாமல், காரியம் முடிந்தது என்ற கணக்கில் இருந்து வருகிறார்.

ஆனால், இந்தநிலைமைகள் காமராஜர்மீது இருந்து வந்த நம்பிக்கையை உடைத்துவிட்டன.

தேர்தலில் புலி என்று கூறப்படும் பேச்சு பொருளற்றதாகிவிட்டது.

காங்கிரசின் சார்பில்தான் காமராஜர் நிற்பாரே தவிர, தன்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்கு இடம் அளிக்கமாட்டார் என்ற நம்பிக்கையும் நொறுக்கப்பட்டிருக்கிறது. சங்கரிடம் காமராஜர் காட்டிடும் தனித்தன்மைகொண்ட கனிவுக்குக் காரணம் என்ன என்று ஆராயவும், பலர் பலவிதமாகப் பேசவும் இடம் ஏற்பட்டுவிட்டது.

தொட்டால் போதும் பட்டமரம் துளிர்த்துவிடும் என்ற விதமான எண்ணம் இருந்து வந்ததே, அதுவும் போயிற்று.

காமராஜர் கட்சியை மட்டுமே முன்னால் நிறுத்திப் பார்ப்பவர், தனிப்பட்ட ஆட்களுக்காகக் கட்சியைப் புறக்கணித்துவிடமாட்டார், சொந்த விருப்பு வெறுப்புகளுக்கு இடமளிக்கமாட்டார் என்று இருந்துவந்த இலட்சியப் பிடிப்பும் முறிந்துவிட்டது; காமராஜரும் தனக்கென்று ஆட்கள் தேடிக்கொள்கிறார் என்ற உண்மையும் வெளிவந்துவிட்டது.

இந்த நிலைமை காரணமாக, இதுவரை எதிர்ப்பு ஏதுமின்றி இருந்துவந்த காமராஜர், இப்போது அக்கம் பக்கம் பார்த்து நடந்துகொள்ளவேண்டி நேரிட்டு வருகிறது.

காமராஜர் வந்தார், காங்கிரசின் புகழ் காப்பாற்றப்படும் என்றபேச்சு மங்கிவிட்டது; மடியத்தொடங்கிவிட்டது; இப்போது காமராஜர் வந்தார், காரியம் கெட்டேவிட்டது என்றே பேசப்படுகிறது.

காமராஜர் இதனைக் காதிலே வாங்கிக்கொள்ளாதவர்போல இருந்து வருகிறார்; நிலைமை புரிவதால்; இருக்கிறவரையில் நிம்மதியாகத் தலைவர்வேலை பார்க்கவேண்டுமே என்பதற்காக.

வெகு பாடுபட்டுக் கட்டிவைக்கப்பட்டுள்ள 'புகழ்' கீறல் விட்டுவிட்டது; விரிவாகக்கவும், பாழ்படுத்தவும், காமராஜரைச் சூழ ஆட்களும் உள்ளனர் என்பது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் அமைச்சர்அவைகட்கும் காங்கிரஸ் அமைப்புகளுக்கும் தொடர்புஇல்லை தோழமை இல்லை, மோதுதல்ஏற்படுகின்றன. இதனால் வலிவு குன்றுகிறது அந்த நிலையைப் போக்கிட வல்லவர் காமராஜர் என்று துந்துபிகள் முழக்கின; காமராஜரின் கனிவான பார்வையைப் பரிசாகப் பெற்றன; ஆனால் எதிர்பார்த்தது நடந்ததா என்றால் அதுதான் இல்லை.

விநாடிக்கு விநாடி உத்திரப்பிரதேச காங்கிரஸ் அமைச்சர் குழுவினருக்கும் காங்கிரஸ் அமைப்புகளுக்கும் மோதுதல் நின்றுவிடவில்லை, தோழமை மலரவில்லை. காமராஜரின் கரம் பட்டால்போதும் நோய் தீர்ந்துவிடும் என்றார்கள், ஆனால் அவர் கொடுத்த தைலமும் பொடியும் ஒரு பலனையும் தரக்காணோம்; மருந்து பலன் தரவில்லை என்பது மட்டுமல்ல, மருத்துவருக்குச் சரியாக நாடி பார்க்கத் தெரியவில்லை, குறிகண்டு நோயின் தன்மையைக் கண்டறியத் தெரியவில்லை என்ற பேச்சு வலுவடைந்து வருகிறது.

உத்திரப்பிரதேசத்தில் உள்ள நிலைமை வேறுபல மாநிலங்களிலும் நெளிந்துகொண்டு தான் இருக்கிறது எல்லாவற்றையும் தீர்த்துவைக்கக்கூடிய திறமை மிக்கவர் செய்திகளைப் படித்துக் கொண்டுதான் இருக்கிறார்.

காமராஜரின் செல்வாக்கு மிக ஓங்கி வளர்ந்திருக்கிறது; அவருடைய கட்டுதிட்டத்துக்கு மீறி ஒருவரும் ஒன்றையும் செய்துவிடமுடியாது. மீறிச் செய்தால் அவர் கண்டிப்பான நடவடிக்கை எடுப்பார் என்ற அச்சம் அனைவருக்கும் இருக்கிறது என்று தொழுகையாளர் கூறிவந்த பேச்செல்லாம் பொருளற்றனவாகிவிட்டன. எத்தனையோ பேர் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர்களாக இருந்தார்கள், காமராஜர் பத்தோடு பதினொன்றுதான் என்று இப்போது ஆகிவிட்டது.

மொழிப் பிரச்சினை குறித்து உணவு அமைச்சர் சுப்பிரமணியமும் அமைச்சர் அளகேசனும் காட்டிய ஆர்வ உணர்ச்சிகண்ட பிறகேனும் காமராஜர், தமது பதவியின் உயர்ந்த தன்மைக்கு ஏற்றபடி திட்டவட்டமான போக்கினை மேற்கொள்வார் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமே அடைந்தனர். கூடிக் கூடிப் பேசுவதும், துணைதேடிக்கொள்வதும் மட்டுந்தான் காமராஜர் மேற்கொள்ளும் நடவடிக்கையாக இருக்கிறது என்பதறிந்து, அளவற்ற செல்வாக்குள்ளவர் என்ற பேச்சு பொருளற்றதுதானா என்று பலரும் கேட்கத் தொடங்கிவிட்டனர்.

இந்தியைத் திணிக்கமாட்டார்கள்; திணிக்கவிடமாட்டேன்; திணித்தால் எதிர்ப்பேன்; இந்தி அறிக்கை அனுப்பப்பட்டால் கிழித்துப் போடுவேன் என்று தென்னகத்தில் வீரமுழக்கம் செய்தவர், வடக்கே கேள்வி கிளம்பியதும் வளைந்து நெளிந்து, நான் அப்படிச் சொல்லவில்லை என்று முறையிட்டுக்கொண்டது, பார்! பார்! எமது காமராஜரின் தீரத்தைப்பார்! இந்தி அறிக்கை வந்தால் கிழித்துப்போடுவேன் என்று தீரமாகக் கூறுகிறார். அத்தகைய வீரர் அவர்! அவரை ஏன் என்று கேட்கவும் இன்று காங்கிரசில் ஆள் கிடையாது, அவருடைய கட்டளைகேட்டு நடக்கக் காங்கிரஸ் காத்துக்கிடக்கிறது! என்று கதைத்துக்கொண்டிருந்த காரச் சரக்குகள் தலையைத் தொங்கவிட்டுக் கொண்டன.

வடக்கே உள்ளவர்கள், இந்தி அறிக்கையைக் கிழித்துப் போடுவதாகவா சொன்னீர்கள் என்று கேட்டவுடன் 'ஆமாம்! அப்படித்தான் சொன்னேன். சொன்னதிலே என்ன தவறு? இங்கு உள்ளவர்கள் இந்தியை முரட்டுப் பிடிவாதத்துடன் திணித்தால்

அதை எதிர்க்காமல் இருக்க நான் என்ன, பிடி ஆளா! பில்லைச் சேவகனா! அகில இந்தியக் காங்கிரசுக்கு தலைவரல்லவா!" என்று அடித்துப் பேசுவார், அதைத் தூக்கிவைத்துக் கொண்டு சந்தைச் சதுக்கம் சென்று காட்டிடலாம், மாற்றுக் கட்சியினரை வாட்டிடலாம் என்று மனப்பால் குடித்தவர்கள், உரிதாவிப் பாண்டத்தைப் பார்த்து, அதிலே பாலில்லாமல் இருந்திடக் காணும் பூனை, வாலை மடக்கிக்கொண்டு வேறு பக்கம் ஓடி எலிக் குஞ்சுக்கு ஏங்கிக் கிடக்குமே அந்த நிலை அடைந்தனர்.

ஆனால் இத்தனை அடக்க ஒடுக்கத்துடன் காமராஜர் பேசியும் அங்கே உள்ளவர்கள் கோபத்தை விட்டு விடவில்லை; என்ன இருந்தாலும் காமராஜர் இந்தி எதிர்ப்பாளர் வேலையைத்தான் மறைமுகமாகப் பார்க்கிறார் என்று முணுமுணுத்தபடி உள்ளனர். அகில இந்தியத் தலைவரிடம் இப்படிப்பட்ட குறுகிய மொழிப்பற்று இருக்கக்கூடாது என்றே பேசுகின்றனர். காமராஜர் ஈடு எதிர்ப்பற்ற தலைவர் என்ற நிலைமாறி, அவரும் மற்றவர்கள்போலத்தான் என்ற நிலை பிறந்துவிட்டது.

இதனை மான்செஸ்டர் கார்டியன் இதழ் வெளிப்படையாகவே எழுதிவிட்டு இருக்கிறது; கறை பட்டுப்போன சிலை என்ற தலைப்பிட்ட கட்டுரையில்.

காமராஜரின் செல்வாக்கு சரிந்துகிடக்கிறது என்பதற்கு மற்றோர் எடுத்துக்காட்டும் உறுத்தியபடி இருக்கிறது.

புவனேஸ்வர் மாநாட்டில் காமராஜர், நாலாவது ஐந்தாண்டுத் திட்டம்பற்றித் தமது முடிவான கருத்தைத் தெரிவித்தார். அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் என்பதால் அவருடைய கருத்து அதிகாரபூர்வமானது என்றுதான், கட்சி இலக்கணம் அறிந்தவர்கள் கருதுவார்கள்.

புவனேஸ்வரில் அவர் நாலாம் ஐந்தாண்டுத் திட்டத்துக்காகக் குறிக்கப்பட்டுள்ள தொகையின் அளவு பெரிது என்று இடித்துரைத்தார்.

இவ்வளவு பெருந்தொகை செலவு செய்யத் திட்டமிடுவது தேவைதானா என்ற கேள்வியை எழுப்பினார்.

இந்தத் திட்டத்துக்காக ஏற்படும் செலவினையும், அதற்காக விதிக்கப்படும் வரிப் பளுவையும் மக்கள் தாங்கிக்கொள்ள முடியாது என்று கூறினார்.

காமராஜரின் இந்தப் பேச்சு, மக்களின் நிலையை அறிந்த தலைவரின் பேச்சு என்றும், வெறும் ஏட்டுப் படிப்பாளர்களின் புள்ளி விவரக் கோட்டையை இடித்துத் தள்ளும் பேச்சு என்றும், பலரும் பாராட்டினர்; இதழ்கள் வரவேற்றன.

காமராஜர் பேசிவிட்டார்; அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் ஆணையிட்டுவிட்டார்; இனி லால்பகதூர் சர்க்காருக்கும், திட்டக் குழுவிற்கும், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் செலவு அளவையும், முறையையும் மாற்றுவது தவிர வேறு வழியில்லை என்று கூறப்பட்டது. அவருடைய பேச்சை அலட்சியபபடுத்தும் துணிவு எவருக்கும் இல்லை என்று முழக்கினர்.

ஆனால் காமராஜரின் பேச்சுக்கு லால்பகதூர் சர்க்காரோ திட்டக் கமிஷனோ ஒரு துளியும் மதிப்பளித்ததாகத் தெரியவில்லை.

அவருடைய புவனேஸ்வரப் பேச்சுபற்றி அவர்கள் கூடிப்பேசி திட்டம்பற்றி மறுபரிசீலனை செய்திடவும் முனையவில்லை.

அவரையே அழைத்து விளக்கம் கேட்டிடவும் முன்வரவில்லை.

ஆயிரம்பேர் ஆயிரம் பேசுவார்கள்; ஏதோ அவருக்குத் தெரிந்ததை அவர் பேசினார் என்ற முறையில் காமராஜரின் பேச்சைத் தள்ளிவிட்டனர்.

திட்டமிட்டபடி நாலாவது ஐந்தாண்டுத் திட்டக் காரியம் நடைபெறும்; தொகையில் வெட்டு இருக்காது; முறையில் மாற்றம் இருக்காது என்று லால்பகதூர் அறிவித்துவிட்டார்.

காமராஜர் பதறவில்லை, சீறவில்லை, என் பேச்சுக்கு இவ்வளவுதானா மதிப்பு என்று கேட்கவில்லை.

அவர் துணிந்திருந்தால், அவருக்கு இருப்பதாகச் சொல்லப்படும் செல்வாக்கு உண்மையாக இருக்குமானால், அவர் தமது புவனேசுவரப் பேச்சின் அடிப்படையில்தான் நாலாவது ஐந்தாண்டுத் திட்டம் அமைய வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்க முடியும். செய்தாரில்லை! ஏன்? ஆணையிட முனைந்ததும், அகில இந்தியத் தலைமையே பறிபோய்விடுமோ என்ற அச்சம்!!

இவருடைய பேச்சைக் கேட்டு, திட்டக்கமிஷனாவது தனது போக்கைத் திருத்திக்கொண்டிருந்திருக்க வேண்டும்; அல்லது இவராவது திட்டக் கமிஷன் காட்டும் போக்கை உணர்ந்து தமது புவனேசுவரப் பேச்சைத் திருத்திககொண்டிருந்திருக்க வேண்டும். இரண்டும் நடைபெறவில்லை. நாடு இரண்டு விதமான பேச்சுகளை, போக்குகளைக் காண்கிறது. ஆனால் நுண்ணறிவினர் இதனை உணருகிறார்கள்—காமராஜரின் பேச்சுக்கு உள்ள செல்வாக்கு இவ்வளவுதான் என்பதனை! அதுபோலவே, தமது பேச்சு மதிக்கப்படாதது கண்டுகூட காமராஜர் கோபம்கொள்ளவில்லை காரணம் நிலைமை அவருக்குப் புரிகிறது என்பதுதான்.

எங்கள் குடும்பத்திலே ஒரு துளியும் கருத்து வேற்றுமையே கிடையாது என்று பெருமிதத்துடன் பேசினானாம் ஒரு பெரிய புள்ளி; எப்போதும் மனைவியுடன் மல்லாடிக்கொண்டிருக்கும் ஒரு சாமான்யன் அந்தப் பேச்சைக் கேட்டு வியப்படைந்தானாம்; உமக்கும் உமது மனைவிக்கும் எப்போதும் எதிலும் கருத்து வேற்றுமையே ஏற்பட்டதில்லையா என்று கேட்டானாம். பெரியபுள்ளி, "வேற்றுமையா! எமக்குள்ளாகவா! எப்படி எனக்கும் என் மனைவிக்கும் கருத்து வேற்றுமை ஏற்படும்! நான் ஏதாவது கருத்து சொன்னால்தானே!!" என்று பதிலளிததானாம,

அந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார்கள் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரை.

தம்பி

# விந்தை மாந்தர்கள்!

ஊருக்குப் பெரியவர், அவரைக் காணும்போது வெறுங்கையுடன் போகக்கூடாது என்று எண்ணி, எலுமிச்சம்பழம் கொடுத்து வணக்கம் கூறுகிறாய், என்று வைத்துக்கொள்—என்ன செய்வார் அந்தப் பெரியவர் என்று எதிர்பார்க்கிறாய்? பதில் வணக்கம் கூறிவிட்டு, எதற்கப்பா இவ்வளவு மரியாதை, நீ என்ன எனக்குப் பழக்கமில்லாதவனா, நம்ம வீட்டுப்பிள்ளை போன்றவன் நீ—என்று பேசுவார் என்றுதானே! யாருமே அப்படித்தான் எதிர்பார்ப்பார்கள். ஆனால்....!

✲

சிரித்துச் சிரித்துப் பேசிடும் இயல்பு! எவரிடமும் விளையாடி மகிழும் சிறுவன்! அவனிடம் அன்புகாட்டி, உன்னால் இயன்றது ஒரு வாழைப்பழம், கொடுக்கிறாய். என்ன செய்வான் என்று எண்ணுகிறாய்? சிறுவன். துள்ளிக் குதிப்பான்! எங்க மாமா நல்ல மாமா! தங்க மாமா! எனக்கு வாழைப்பழம் கொண்டுவந்து கொடுத்துது! என்று மகிழ்ச்சியுடன் கூறியபடி தன் தாயிடம் பழத்தைக் காட்டி, பிறகு அதைத் தின்பான் என்று. ஆனால்...!

✲

நீ மட்டும் சாக்கடை நாற்றத்தைப் போக்கிவிட்டு, இந்த இடத்தைப் பூக்கடை ஆக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமை ஆகிவிடுகிறேன் என்று ஒருவரிடம் கூறுகிறாய் என்று வைத்துக கொள். அவர் என்ன செய்யவேண்டும்? முடிந்தால் நீ சொன்னதைச் செய்து காட்டிவிட்டு பிறகு உன்னிடம் வரவேண்டும், பார்! நீ சொன்னபடி செய்துவிட்டேன், இப்போது என்ன சொல்கிறாய் என்று கேட்கவேண்டும். ஆனால்...!

✲

ஊமைப்பெண்ணைப் பேசவைத்துவிடு, ஒன்பதே நாளில் நான் அவளை தேசிகர் மெச்சிடும் பாடகி ஆக்கிக்காட்டுகிறேன் என்று ஒருவரிடம் சொன்னால் அவர் என்ன பொருள் கொள்ளவேண்டும் என்று எதிர்பார்ப்பாய்! ஊமைப்பெண்ணைப் பேசவைக்க நம்மாலே முடியவா போகிறது; எதற்காக நாம் ஒரு வம்பான பந்தயத்திலேபோய் மாட்டிக்கொள்வது என்று எண்ணி வாய் மூடிக்கொள்வார் என்றுதானே! ஆனால்...!

✲

கொடுத்த கடனை மட்டும் கோபாலன் திருப்பிக் கொடுத்துவிடட்டும், பார்! நான் என் ஒரு பக்கத்து மீசையை எடுத்துவிடுகிறேன்!!—என்று ஒருவரிடம் 'சவால்' பேசுகிறாய் என்று வைத்துக்கொள்—அவர் என்ன செய்யவேண்டும்? கோபாலனை நச்சரித்தாகிலும் பணத்தைப் பெற்றுக்கொண்டு, பிறகு வந்து பார்த்து, "கடனைத் திரும்பப்பெறவே முடியாது என்று சொன்னாயே! இதோ பார்!" என்று பணத்தைக் காட்டிவிட்டு, என்ன ஆவது உன்னுடைய 'சவால்' என்று கேட்கவேண்டும். ஆனால்...!

✲

குத்துச்சண்டை குமரப்பனைக் குப்புற வீழ்த்திக்காட்டு உனக்கு எட்டுப் பவுனில் தங்கத் தோடா செய்து போடுகிறேன் என்று கூறினால், அந்த நண்பன் என்ன செய்யவேண்டும்? குமரப்பனிடம் பேரம் பேசிக்கொண்டாகிலும் அவனை வீழ்த்துவதுபோல பாவனையாகவாகிலும்



செய்து காட்டிவிட்டு, எங்கே எட்டுப் பவுனில் தோடா என்று கேட்கவேண்டும். ஆனால்...!

✽

ஆனால், முதலமைச்சர் பக்தவத்சலனார் இருக்கிறாரே, அவர் நீ எதிர்பார்க்கிறபடி நடந்துகொள்ள மாட்டார்போலிருக்கிறது.

எலுமிச்சம் பழத்தை மரியாதைக்காக நீ கொடுத்ததும் அந்தப் பெரியவர், உருட்டிவிழி காட்டி மிரட்டும் குரல் எழுப்பி, "ஏடா! என்னைக் கேலியா செய்கிறாய்! என்ன துணிவு உனக்கு, எனக்கு எலுமிச்சம் ப்ழம்தர! என்ன உன் நினைப்பு! யார் என்று என்னை எண்ணிவிட்டாய்! எனக்குத் தலை கிறுகிறுப்பு, பித்தம், பைத்யம், என்று காட்டத்தானே, எலுமிச்சம்பழம் கொடுக்கிறாய், இதைத் தலையில் தேய்த்துக்கொண்டு நீராடினால், பித்தம் குறையும், புத்தித்தடுமாற்றம் போய்விடும் என்று குத்திக்காட்டும் செயலல்லவா இது. எலுமிச்சம் பழம் எனக்கு! ஏடா பயலே! என்ன திமிர் உனக்கு!! — என்று பேசினால், என்ன நிலை ஆவாய்? திணறிப்போவாய்! முதலமைச்சர் பக்தவத்சலம் தமது போக்காலும் பேச்சாலும் நம்மைத் திணற அடிக்கிறார் என்று தோன்றுகிறது. மரியாதைக்குத் தந்த எலுமிச்சம் பழத்தை, கேலிக்குத் தந்தது என்று தப்பர்த்தம் செய்துகொண்டு 'தகதக'வென்று ஆடிடும் பெரியவர் போல, நான் சொல்வதைத் தப்பர்த்தம் செய்துகொண்டு, பதைபதைக்கிறார், படபடக்கிறார், பலப்பல பேசுகிறார்.

சிறுவனிடம் பழம் கொடுத்ததும், இது என்ன சிறுமலையா, பூவனா, நேந்திரமா, என்று கேட்டால், பரவாயில்லையே சிறுவன் கெட்டிக்காரன் என்று எண்ணிக்கொள்வாய். அந்தச் சிறுவனோ, பழத்தை ஆவலுடன் வாங்கி உரித்து, சுளையை ஜன்னல் வழியாக வீசி எறிந்துவிட்டு, தோலைத் தூக்கிக்கொண்டு ஓடோடிச் சென்று, "அம்மா! அம்மா! பார்! பார்! மாமா கொடுத்தது, பாரம்மா!" என்று கூவுகிறான். வாழைப்பழத்தில் சுளை சுவைத்திட, தோல் மாட்டுத் தொழுவத்துக்கு என்ற விவரமும் புரியவில்லை சிறுவனுக்கு. சிறுவனுக்கே கூட இது புரியவில்லை என்றால். நமக்கு என்னமோ போல இருக்கும். சுளை முக்கியமா தோல் முக்கியமா என்பதுகூடத் தெரியாதா; வயது எட்டு இருக்கும் போலிருக்கிறதே என்று எண்ணிக்கொள்வோம்; ஏக்கம் கொள்வோம்.

பெரியவர்கள், பெரிய இடத்தில் உள்ளவர்கள், எத்தனை பெரிய செயலையும் எளிதாகச் செய்திடும் வாய்ப்புப் பெற்றவர்கள், சுளையை எறிந்துவிட்டு, தோலைத் தூக்கிவைத்துக்கொண்டு விளையாடினால் நான் என்ன சொல்லமுடியும்! பரிதாபப்படலாம்!!

முதலமைச்சர் பக்தவத்சலனார் சுளையை விட்டுவிட்டுத் தோலை ஆவலுடன் எடுத்துக்கொள்ளும் விவரமறியாத விளையாட்டுப் பிள்ளையல்ல; வயதில் பெரியவர்; சொல் அதன் பொருள்; பொருள் அதன் பொருத்தம்; இடம் காலம் என்ற இவைகளை அறிந்திடும் பக்குவம் பெற்றவர்; என்றாலும் என் பேச்சிலே அவருக்குத் தோல்தான் பிடிக்கிறது, சுளையைச் சுவைத்திட மனம் இல்லை என்றால்; நான் என்ன செய்யலாம்! இவ்வளவு பெரியவரும் இப்படித்தானா என்று எண்ணி ஏங்க வேண்டும்! வேறென்ன செய்யமுடியும்! அவருடைய இயல்பையா மாற்ற முடியும்? நானா? ஏ! அப்பா! நம்மாலே முடிகிற காரியமா! நாடே முயன்று பார்த்து, முடியவில்லையே என்று முணுமுணுக்கிறதே! நான் எம்மாத்திரம்!!

சாக்கடையை அகற்றிவிட்டு அந்த இடத்தைப் பூக்கடை ஆக்கிக் காட்டு, நான் உனக்கு அடிமை ஆகிறேன் என்று சொன்ன சொல்லைக் கேட்டு, சாக்கடையைச் சுத்தப்படுத்த முனையாமல்; தெருத் தெருவாகச் சுற்றி, தெரியுமா! தெரியுமா! எனக்கு அவன் அடிமை ஆகிவிட ஒத்துக்கொண்டான்! என்று அந்த ஆசாமி பேசினால்; ஊர் என்ன சொல்லும்? நேற்று வரை நன்றாகத்தானே இருந்தான்; இன்று என்ன ஏதேதோ பேசுகிறானே என்று கூறும்.

ஆனால் நாடாளும் நல்லநிலையில் உள்ள முதலமைச்சர் பக்தவத்சலம், சாக்கடையைப் போக்கி பூக்கடை வைத்திடு என்ற நிபந்தனையைக் கூறாமல், அடிமை ஆகிவிடுவதாகச் சொன்னான் என்ற அபத்தைச் சுமந்து திரிவதுபோல, என் பேச்சிலே இணைந்துள்ள நிபந்தனைகளைக் கூறாமல், என்சவாலின் இறுதிப் பகுதியை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசுகிறார். நான் என்ன சொல்லி அவருக்கு விஷயத்தை விளங்கவைப்பேன். அறியாதவர்களுக்குச் சொல்லலாம்; அறிந்துகொள்ள மறுப்பவர்களுக்கு எப்படிச்


பாவையின் பயணம் ரூ. 1—50

அரசாண்ட ஆண்டி ரூ. 1—50

அண்ணாவின் கருத்தோவியம்

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2—00

கிடைக்குமிடம்! பரிமளம் பதிப்பகம், சின்ன காஞ்சிபுரம்.

சொல்வது! எதைச் சொல்வது! இப்படித்தானா இவர் என்று எண்ணிக்கொண்டு வேறு பயனுள்ள காரியத்தைக் கவனிக்கச் செல்ல வேண்டியதுதான்! ஒருவனின் முதுகுக் கூனை நிமிர்த்திட மருத்துவ மனையா அமைக்க முடியும்!!

இதோ தண்டபாணி தேசிகர்! இவர் மெச்சிடும் விதமான பாடகி ஆக்கிடுவதாகச் சொன்னாயே! எங்கே அந்தப் பெண்! பாடச் சொல்லு!!—என்று கேட்டுக்கொண்டு, ஊமைப் பெண்ணை நீ பேசவைத்தால், நான் பாடவைக்கிறேன் என்று சொன்னதில் முதல் நிபந்தனையை நிறைவேற்றாமல் இறுதி நிபந்தனையைத் தூக்கிக் காட்டினால், என்ன பொருள்! ஊமைப் பெண் பேசட்டும், பேசச் செய்—பிறகு பாடுவாள்—பாடவைக்கிறேன் என்றுதானே பதில் தரவேண்டும். அவ்விதமான பதிலை நான் தரவேண்டிய நிலைமையை உண்டாக்குகிறார், என் பேச்சிலே உள்ள இணைப்பைக் கழற்றிவிட்டு, கையில் கிடைத்ததை மட்டும் எடுத்து வைத்துக்கொண்டு பேசும் 'கனம்' பக்தவத்சலம் அவர்கள்!

ஒருவருக்கொருவர் நடத்திக்கொள்ளும் வாக்குவாதத்தில், முழுவதையும்—தொடர்பாக உள்ளது அவ்வளவையும் எடுத்துப் பார்த்து, பொருளும் பொருத்தமும் காணவேண்டுமே யன்றி, ஒரு துண்டு மட்டும் தூக்கிவைத்துக் கொண்டு இதற்கென்ன பொருள் என்று கேட்பது?

இராமன் சீதையைக் கரம் பற்றினான்.

அனுமாரின் வாலில் தீ பற்றிக் கொண்டது.

தசரதன் கீழே வீழ்ந்து மடிந்தான்.

மான் மாயமாக மறைந்தது.

சூர்ப்பனகையின் மூக்கை அறுத்தனர்.

ஆ! பிராணநாதா! என்று சீதாதேவி அலறினாள்.

சேடிகள் சிரித்து மகிழ்ந்தனர்.

வில்லை எடுத்தான்; விரிந்தது, ஒடிந்தது.

இவை எல்லாம் உள்ளன இராமாயணத்தில்; ஆனால், ஒவ்வொன்று ஒவ்வோரிடத்தில், ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு பொருத்தம், இணைப்பு; இவ்விதமாக உள்ள எண்ணற்ற நிகழ்ச்சிகள், பொருத்தமுடன் இணைக்கப்பட்டுள்ள மொத்த வடிவத்தைக் கொண்டுதான் இராமாயணத்தின் பொருளைத் தெரிந்துகொள்ளலாமே யன்றி, இராமாயணத்தில் வெவ்வேறு இடத்தில் உள்ளவைகளில் சிற்சில துண்டுகளைக் கல்லி எடுத்துவைத்துக் கொண்டு, 'பார்த்தனையா இராமாயணம்' என்று பேசுவார்கள். அதுபோல இந்தப் பெரியவர் என் பேச்சிலே தொடர்புதனை இவராக அறுத்துவிட்டு, துண்டு துணுக்குகளைத் தூக்கிவைத்துக்கொண்டு, இதுதான் அண்ணாதுரை சொன்னது! இதுதான் அவருடைய கருத்து! என்று பேசுவது. இவ்வளவு பெரிய இடத்தில் இருந்து கொண்டா! வெட்கமாக இருக்கிறது நம்மவர் இப்படிப் பேசுகிறாரே என்று இவருக்கு மெத்தவேண்டியவர்களே என்னிடம் கூறும்போது.

என்னைக்கண்டிக்க, கேலிபேச, அவருக்கு உரிமையும் இருக்கிறது, வசதி நிரம்ப, வாய்ப்பும் அதிகம். நிலையை எடுத்துக்கொண்டாலும், அவர் எதுவும் பேசலாம். ஆனால் அதற்காக இவ்வளவு வழுக்கி விடுவதா! இந்தி ஆட்சிமொழி இல்லை என்று சர்க்கார் அறிவித்துவிட்டு, அது இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்ற திட்டமும் கூறாமல், அதனைக் கட்டாயம் படித்தாகவேண்டும் என்றும் சட்டம் போடாமல், இந்தி பரப்புவதற்காகச் சர்க்கார் பணமும் செலவழிக்காமல் இருந்தால் இந்தி பரவிட உமது உதவி கிடைக்குமா என்ற கருத்துப்பட—லால்பகதூர் அல்ல—நந்தா அல்ல—பாராளுமன்றத்தில் அல்ல—பத்திரிகை நிருபர் ஒருவர்—நிருபர்கள் மாநாட்டில் கேட்டிருக்கிறார். அவருடைய கேள்வி, சவால் விடுகிறமுறையில் இருந்தது. நானே பதில் கூறும்போது, நான் அந்தச்சவாலை ஏற்றுக்கொள்கிறேன் என்ற முன்னுரையுடன் பேசி இருக்கிறேன்—இதனை நான் விளக்குவதற்கு முன்பே இந்து பத்திரிகை விளக்கமாக்கி இருக்கிறது — இவ்வளவுக்கும் பிறகு முதலமைச்சர் என் மீது தமது கேலிப் பேச்சை வீசுவது முறை அல்ல! அதனால் எனக்கு எந்த இழுக்கும் வந்துவிடாது இவரைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிக்கொள்வார்கள்; பேசிக் கொள்கிறார்கள்.

யாராவது ஒருவர் என்னிடம்வந்து, 'அண்ணாத்துரை! வா! வா! இந்தி பரப்பிடவா!'' என்று அழைத்தால் என்ன சொல்வேன் என்று எதிர்பார்க்கிறார் முதலமைச்சர். 'இதோ வந்துவிட்டேன்' என்று! வந்து கேட்பவர் விவரம் புரியாதவராக இருந்தால், விளக்கம் கொடுத்து அனுப்புவேன்; விஷமத்தனமாகக் கேட்பவராக இருப்பின், ''மதியிலி! என்னைப்போய் அழைக்கிறாயே இந்தியைப் பரப்ப உதவும்படி! நான் சொன்



னது என்ன? அதைச் செய்துமுடித்தாயா? ஓடு! சாஸ்திரியிடம்! இந்தி இந்தியாவின் ஆட்சிமொழி அல்ல என்ற உத்திரவு போடச்சொல்லு, ஒரு கோடிக்குமேல் இந்திக்காச் செலவிடப் பணம் ஒதுக்கியிருக்கிருர்களே, அந்தப் பணத்தை வேறு ஏதாவது உருப்படியான காரியத்துக்குச் செலவிடச் சொல்லு, அதை எல்லாம் செய்துவிட்டல்லவா என்னிடம் வரவேண்டும். அதைச் செய்ய வக்கு வல்லமை இல்லாமல் என்னிடம் வந்து பேசுகிருயே! போ! போ! என்று கூறுவேன்.

ஆனல் முதலமைச்சர் தவருகப் புரிந்துகொண்டு பேசும்போது குடிமகன் இத்தனை கண்டிப்பாகப் பேச முடியுமா! அதனுல்தான் என் மனக்கண்முன், எலுமிச்சம்பழம் கண்டு எரிச்சல் கொண்ட பெரிய மனிதர், சுளையைக் கீழே போட்டுவிட்டுத் தோலைத் தூக்கிவைத்துக்கொண்டு ஆடிடும் சிறுவன், ஊமைப் பெண்ணைப் பேசவைக்க ஒத்துக்கொண்டு அதைச் செய்து முடிக்காமல், இந்தப் பெண்ணைப் பாடச் செய் என்று கேட்ட அப்பாவி ஆகியோர் தெரிந்தனர்.

நானுகவா இட்டுக்கட்டிச் சொல்கிறேன், பத்திரிகையில் வந்ததைச் சொல்கிறேன் என்று வாதாடிக் காட்ட நினைப்பார்கள்.

பத்திரிகை நிருபர்கள் மாநாட்டிலே கூறப்படுபவைகளை, இன்னின்ன விதமாக நீங்கள் சொன்னீர்கள், இன்னவிதமாக நாங்கள் வெளியிடுவதாக இருக்கிருேம் நீங்கள் இப்படித்தானே சொன்னீர்கள் என்று நம்மிடம் காட்டி, ஒப்பம் பெற்றுக்கொண்டு, இதழ்களில் வெளியிடும் வழக்கம் இல்லை. குறித்துக்கொண்டு போகிருர்கள், வெளியிடுகிருர்கள்; வெளியிடுவதற்கு மறுப்பு நாம் அளித்தால்கூட பல வேலைகளிலே மறுப்பை வெளியிடுவதுமில்லை; வெளியிடும்போதுகூட, பளிச்சிட்டுக் காட்டுவதில்லை. இது இன்று உள்ள முறை.

இந்த நிலையில், எனக்கு அல்ல முதலமைச்சர் போன்ற பெரிய நிலையினருக்கே, அவர்கள் எதிர்பார்க்காத முறையில் செய்திகள் வெளியிடப்பட்டு விடுவதுண்டு.

மாணவர்களுக்கு கழகத் தலைவர்கள் புகாரி ஓட்டலில் பிரியாணி வாங்கிக் கொடுத்து மயக்கிவிட்டார்கள் என்று முதலமைச்சர் சொன்னதாகப் பத்திரிகைகளிலே வெளிவந்தது. படித்தோம், பதறினேம்.

முதலமைச்சர் இதற்கு ஒரு மறுப்பும் வெளியிடவில்லை; பல நாட்கள் உருண்டோடியும்.

தொலைபேசி மூலம் தெரிவித்திருந்தால்கூடப் பத்திரிகைகள் மறுப்பை வெளியிட்டிருக்கும். செய்தாரில்லை. செய்யவேண்டும் என்று தோன்றவுமில்லை.

ஒரு திங்கள் அளவு சென்ற பிறகு, நான் அப்படிச் சொல்லவே இல்லை; பத்திரிகையில் வந்தது வெறும் புரளி என்று முதலமைச்சர் கூறினர். அதனைப் பத்திரிகைகள் வெளியிட்டன; வேறென்ன செய்ய முடியும்?

ஒரு திங்கள் அளவு வாய் மூடிக்கொண்டிருந்துவிட்டு இப்போது 'என் வாயில் பிரியாணி என்ற வார்த்தையே வராது' என்று முதலமைச்சர் சொல்கிருர், என்ன செய்தோம்? சரி! ஒரு விளக்கம், மறுப்பு, சமாதானம்— என்ற முறையில் அதனைக் கருதிக்கொண்டோம். இல்லை! இல்லை! பிரியாணி என்று சொன்னர்' இன்னின்ன பத்திரிகைகளைப் பார்த்தால் புரியும்! என்று கூக்குரல் எழுப்பினர்களா! இல்லையே!! பெரியவர் கூறிவிட்டார், சரி என்று இருந்து விட்டோம்.

இவர்போன்ருர் பத்திரிகைகளில் வெளியிடப்படுவதை இல்லை என்று மறுக்கலாம், புது விளக்கம் தரலாம், பத்திரிகையில் ஆயிரத்தெட்டு வரும் நாஞ பொறுப்பு என்று தர்பார் பேசலாம், நாடு தாங்கிக் கொள்ளவேண்டும், ஆனல் நான் பேசியிருப்பதற்கு — இன்ன பொருள்-இதற்குத் தப்பான பொருள்கொள்ளாதீர்கள் பொறுத்தமற்று, தொடர்பற்றுப் பேசாதீர்கள் என்று நான் விளக்கம் அளித்தால், அதனைக் கவனிக்கக்கூடமாட்டார்களாம் இவர்கள்! ஏன்?இவர்கள்பெரிய இடம், நான் சாதாரணம்! நியாயம் பொது! நேர்மை எத்தனை உயரம் சென்ருலும் இருக்கவேண்டும். இருக்கிறதா என்பதற்கு எனக்கல்ல அவரவர்கள் தமது நெஞ்சுக்குப் பதில் கூறிக்கொள்ளவேண்டும்.

மாணவர்களைச் சந்திக்க முதலமைச்சர் மறுக்கிருர் என்று இதழ்கள் வெளியிட்டன. இவர் அதனை அப்போது மறுக்கவுமில்லை. இப்போது, நான் அவ்விதம் சொல்லவில்லையே என்ருர், நாடு கேட்டுக்கொண்டது. அன்று வெளிவந்த இதழ்களைத் தூக்கிக்கொண்டு போய் இவர் எதிரில்போட்டு, இதற்கென்ன சொல்கிறீர்? இதற்கு என்ன பொருள்? என்ரு கேட்டது.

நான் அப்படிக்கூட அல்ல, என் பேச்சின் மொத்தத்தை, ஏன் அதுபோல் பேசினேன் என்பதற்கான காரணத்தை, என் நோக்கத்தைப் புரிந்துகொண்டு பேசுங்கள் என்று சொல்கிறேன்;, அந்த அளவு கண்ணியம்கூடவா காட்டக்கூடாது?

ராஜ்யசபைப் பேச்சு, பத்திரிகை நிருபர்களிடம் பேசியது என்ற இரண்டையும் ஒன்ருகப் போட்டுக் குழப்பிக்கொண்டு, குழப்பிப்போய், குழப்பமாக இருக்கிறதே என்று பேசுகிருர் முதலமைச்சர். அவராகக் குழப்பத்தைத் தேடிக்கொண்டால் யார் என்ன செய்ய முடியும். காலம் தெளிவளிக்கட்டும் என்று காத்திருக்க வேண்டியதுதான்.

இதுபற்றி நான் எண்ணிக் கொண்டிருந்தபோது தான் என் மனக்கண்முன் விந்தைமாந்தர்கள் தெரிந்தனர், உனக்கும் தெரிவித்தேன்.

அண்ணன்,

அண்ணாதுரை

# அய்யாவுக்கு அழகுத்தேமல்!

பெரிய புள்ளிக்குக் குட்டநோய் கண்டால் மற்றவர்கள் அருவருப்பை வெளியே காட்டிக்கொள்ள மாட்டார்கள்!

அய்யாவுக்கு அழகுத் தேமல்! என்று கூறிவிடுவார்கள்; அவருடைய பொல்லாப்பு நமக்கு ஏன் என்று.

அதுபோலவே பெரிய இடத்தில் உள்ளவர்கள் வேளைக்கு ஒரு பேச்சு நாளைக்கு ஒரு கருத்து கூறினாலும், அதனைத் தடுமாற்றம் என்றோ குழப்பம் என்றோ மற்றவர்கள் கூறமாட்டார்கள்!

சீமான் வீட்டுச் சிறுவன் வீசும் எச்சிற் பண்டம் மேலே விழுந்தாலும், ஏழை கோபித்துக்கொள்ள முடிகிறதா, "தம்பி! விளையாடுகிறது! என்னிடம் தம்பிக்கு அவ்வளவு ஆசை!!" என்று பேசி எரிச்சலை மறைக்கிறான்.

அந்தப் பேச்சே கூடச் சீமானுக்கு எரிச்சலை மூட்டுகிறது, "மடப்பயலே! தம்பி! தம்பி! என்று மட்டு மரியாதை இல்லாமல் பேசுகிறாயே. நாலு பேர் காதிலே விழுந்தால் என்ன எண்ணிக் கொள்ளுவார்கள்! தம்பியாம் தம்பி! சின்ன எஜமான் என்று சொன்னால் என்னவாம்!" என்று கேட்பார் கோபத்துடன்.

பொல்லாத உலகமிது! நல்லோர்கள் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தொல்லைப்படும் உலகம்.

"அம்மா கோயிலுக்குப் போக வேண்டுமாம், மோடாரை எடுத்துக் கொண்டு போகச் சொல்லு டிரைவரை" என்று உத்திரவிடுகிறார் சீமான் — சீட்டாடிக் கொண்டே.

வேலையாள் தயங்கித் தயங்கி நிற்கிறான் சொன்னதைச் செய்யப் போகாமல். சீமான் சீற்றம் கொள்கிறார், அர்ச்சனை நடக்கிறது.

வேலையாள் போகவும் முடியாமல், மனதில் உள்ளதைச் சொல்லவும் முடியாமல் திணறுகிறான்.

காரணம் என்ன? ஐயா மறந்து விட்டார்; மோடாரை ஐயாதான் அரை மணி நேரத்துக்கு முன்பு ஒயிலூருக்கு அனுப்பிவைத்தார்.

ஒயிலூரில் ஐயாவுக்கு உள்ள தொடர்பு சீட்டாடும் நண்பர்களுக்குத் தெரியலாமோ!

ஆகவே அதனைக் கூறுவதற்கு இல்லை; ஐயாவோபதறுகிறார்! என்ன செய்வான் வேலையாள்! வளைகிறான், நெளிகிறான், கனைக்கிறான், கண் சிமிட்டுகிறான்; ஏதாவது ஒரு குறி காட்டி ஐயாவுக்கு விஷயத்தைக் கவனப்படுத்த! முடியவில்லை! மேலும் அர்ச்சனை நடக்கிறது! என்ன செய்வான்? பொல்லாத உலகம்! உண்மையைக் கூற அஞ்சிட வேண்டிய நிலை; நெளியும் உலகம்!

எட்டாயிரத்து எண்ணூறு நிலத்தின் விலை என்று கூறுகிறார் வட்டி வாணிபம் நடத்தி வகையான ஆளாகிவிட்டவர்; கணக்கெழுதிடும் கந்தன் பக்கத்தில்தான் நிற்கிறான்; உண்மைக் கணக்கு தெரியும்; சொல்லலாமோ!! ஐயா ஏதோ காரணத்துக்காகத்தான் ஆறாயிரத்துக்கு நானூறு குறைவு விலை கொடுத்து வாங்கிய நிலத்துக்கு எட்டுக்கு மேல் கொடுத்ததாகச் சொல்லுகிறார்; நாம் குறுக்கிட்டுப் பேசலாமோ! — என்று எண்ணிக் கொள்கிறான். மற்ற வேளைகளில் அவன் ஒவ்வொரு பேச்சுக்கும், கட்டின வீட்டிலிருந்து சொல்கிறேன் —பிள்ளைகுட்டி சாட்சியாகச் சொல்கிறேன்—வெற்றிலையைக் கையில் வைத்துக்கொண்டு சொல்கிறேன் என்று சத்தியம் செய்யவேண்டி இருக்கிறது, எஜமானரை நம்பச் செய்ய. அப்படியும் அவர் நம்புவது இல்லை. அவர்தான் எட்டு என்கிறார் திட்டவட்டமாக! பொய் என்று கூற முடியுமா! மறதியா என்று கேட்க முடியுமா! ஏழை! ஐயா சந்தோஷமாக இருக்கும்போது, ஒருவரும் உடன் இல்லாதபோது கேட்கிறான் என்றே வைத்துக்கொள்வோம், பதில் கூறும் திறமையா ஐயாவுக்கு இல்லை!

"மடயா, நிலத்துக்குக் கொடுத்தது ஆறுக்கும் குறைவுதான்; அது எனக்குத் தெரியாதா? அந்த நிலம் வாங்கப் போனபோது, நமது மோடார் ஒரு பள்ளத்தில் விழுந்து கெட்டுவிட்டதே கவனமில்லையா! அதற்கான செலவையும் கூட்டிக் கணக்குப் பார். உன்மரமண்டைக்கு நான் சொன்ன கணக்குச் சரிதான் என்பது விளங்கும்" என்கிறார். கணக்கெழுதுபவன் என்ன எண்ணிக்கொள்கிறான்.

(12-ம் பக்கம் பார்க்க)

## வினா-விடை

(1) இந்தி வெறி காரணமாகச் சிலர் ஆங்கில அறிக்கைகளை அரசினர் தருகிறபோது கிழித்துப் போடுகிறார்களே, அதுபோல இந்தி எதிர்ப்பாளர்கள் இந்தி அறிக்கைகளைக் கிழித்துப் போட்டால், இந்தி வெறி அடங்கு மல்லவா?

கிழித்துப்போடலாம் ஆனால் இந்தி ஆதிக்க வெறி அடியோடு ஒழியவேண்டுமானால், வெறும் இந்தி அறிக்கைகளைக் கிழித்துப்போட்டால் போதாது இந்திதான் ஆட்சிமொழி என்று இவ்வளவு நடந்த பிறகும் வீம்பு பேசிவரும் காங்கிரஸ் ஆட்சிக்குச் சீட்டுக் கிழிக்கவேண்டும். பொது மக்கள் அதற்குத் தயாராகிவிட்டால் இந்தி ஆதிக்கவெறி தன்னாலே மடிந்தொழியும்.

(2) காங்கிரஸ் அரசு, புதிய புரட்சிகர தொழில் திட்டங்களை மேற்கொண்டிருப்பதாக என் நண்பர் ஒருவர் பெருமை பேசுகிறார். உண்மையில் அப்படித்தானா?

அதெல்லாம், புதிய என்பதற்கும் புரட்சிகரம் என்பதற்கும் கொள்ளும் பொருளைப் பொருத்திருக்கிறது. ஒருசமயம் அந்த நண்பர், நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்திய சர்க்கார் பல இடங்களில் பன்றிப் பண்ணைகள் அமைத்துப் பன்றி இறைச்சி தயாரிக்க திட்டமிட்டிருப்பதை, புதியது புரட்சிகரமானது என்று கருதிப் பூரிக்கிறார்போலும்!

(3) ஊழல்! ஊழல்! என்று அடிக்கடி பேசி, காங்கிரஸ் அரசைக் குறை கூறுகிறீர்களே, காங்கிரஸ் அரசின் நிர்வாகத்துக்குள் நுழைந்து பார்த்தா பேசுகிறீர்?

என்ன கேள்வியப்பா இது" வேடிக்கையாக இருக்கிறதே. தலையிலே பேன் பிடித்திருக்கிறது என்று கூறிட, பேனைக் குத்திப்பார்த்துத்தானா சொல்ல வேண்டும்; ஆசாமி தலையைப் போட்டு பிருண்டிக்கொள்வதைக் கண்டே சொல்ல முடியாதா!

(4) பட்டக்காரரிடம் இருந்த உணவு இலாகா, ராமய்யாவிடம் வந்த பிறகு, புதியவர் என்ன புதுமையைச் செய்திருக்கிறார்?

கொஞ்சம் பொறுத்துக் கொள்ளப்பா! புதிய உணவு மந்திரியின் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்கிறது. கடல் பாசியிலிருந்து உணவுப் பொருள் தயாரிக்கப் போகிறாராம்!! முன்பு ஒரு உணவு மந்திரி--ரொம்பப் பெரியவர்— பருத்திக்கொட்டை சாப்பிட்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளச் சொன்னார். இவர் கடல் பாசியைக் காட்டுகிறார்—பசி போக்கிக்கொள்ள!!

(5) எலிகளால் உணவுப் பொருள் ஏராளமாக நாசமாகிறதாமே? ஏன் அதை ஒழிக்கக் கூடாது?

ஒரு நிபுணர் தந்துள்ள கணக்கின்படி இந்தியாவில் மக்கள் தொகையைப்போல முப்பது மடங்கு எலிகள் உள்ளனவாம். உற்பத்தியாகும் உணவுப் பொருளில் அரைக் கால் பாகம் எலிகளால் நாசமாக்கப்பட்டுவிடுகிறதாம். எலிகளை ஒழிக்க ஒரு தேசீயத் திருநாள் நடத்தவேண்டும் என்று பேரரசின் உணவு மந்திரி சுப்பிரமணியம் ஒரு யோசனை கூறினார். அடுத்த காங்கிரசில் கவனிக்கக்கூடுமோ என்னமோ — உனக்குத் தெரிந்த மண்டலம் யாரும் இல்லையா? சொல்லிப்பாரேன் யோசனையை!

(6) அமைச்சர்கள் சுப்பிரமணியமும் அளகேசனும் ராஜிநாமாச் செய்தது சரியல்ல, சிலாக்கியம் அல்ல என்று முதலமைச்சர் பக்தவத்சலனார் கூறுகிறாரே, நியாயமா?

நியாயமா அல்லவா என்பது இருக்கட்டும் ஒருபுரம்; அவர் அப்படிப் பேசுவது தேவைப்படுகிறதே! அவர்கள் ராஜிநாமாச்செய்தது சரிதான்; சிலாக்கியமானதுதான் என்று முதலமைச்சர் சொன்னால், நீ விடவா போகிறாய்! ஏன் தாங்களும் அதுபோல ராஜிநாமாச் செய்யக்கூடாது என்றுகேட்டு விடுவாயே! அவர் என்ன இலேசுப்பட்டவரா? எவ்வளவுபெரிய அனுபவசாலி! உன்கேள்வியே அவருடைய பதவிக்கு உலை வைக்கக்கூடியது என்பது அவருக்கா தெரியாது! அதனால்தான், ராஜிநாமாச் செய்தது சரியில்லை என்று ஒரு போடு போட்டார்.

(7) கென்னடி போலவே ஜான்சனும் நீக்ரோக்கள் விஷயத்தில் அக்கறை கொண்டவரா?

இதுபற்றி ஒரு சந்தேகம் வந்ததற்குக் காரணமே, ஜான்சன் அமெரிக்காவின் தென் பகுதியைச் சேர்ந்தவர்; நீக்ரோக்களுக்கு வெள்ளையர் கொடுமை செய்யும் பகுதி தென்பகுதி; ஆகவே ஜான்சன் நீக்ரோக்கள் விஷயத்தில் அக்கறை காட்டமாட்டார் என்று சந்தேகம் எழுகிறது. ஆனால் அந்தச் சந்தேகத்தைப் பஞ்சு பஞ்சாக விரட்டி அடித்துவிட்டார், இப்போது நீக்ரோக்கள் அலபாமா மாநிலத்தில் நடத்திய அறப்போருக்கு ஆதரவு காட்டியதன் மூலம்; கென்னடி ஆபிரகாம் லிங்கன் வழியைப் பின்பற்றினார்; ஜான்சன். கென்னடி காட்டிய நெறியிலே செல்கிறார்.

(8) காந்தியாரின் பேரப்பிள்ளை என்ன செய்கிறார்

காங்கிரசை எதிர்க்கிறார், சமாதானம், சம உரிமை! ஆகிய இலட்சியம் பரவ இயக்கம் நடத்துகிறார்.

(9) சர்தார் படேலின் பிள்ளை என்ன செய்கிறார்?

அவரும் காங்கிரசை எதிர்க்கிறார். அவர் ராஜ்யசபைஉறுப்பினர் பெயர் தாயாபாய்படேல்!

(10) ஜஸ்டிஸ் கட்சித் தலைவாக இருந்த பொப்பிலி ராஜாவின் மகன் இப்போது எந்தக் கட்சி, தெரியுமா?

தெரியுமே!காங்கிரஸ் கட்சி! ஆமய்யா, உண்மையாகத்தான். இப்போது பொப்பிலி ராஜா மகன், டில்லி பாராளு மன்ற உறுப்பினர்-காங்கிரஸ் கட்சி.

(11) விசைத்தறி பரவ காங்கிரஸ் வேலை செய்கிறதே, இது கைத்தறி நெசவாளர்களைக் கெடுக்காதா?

நிச்சயமாகக் கெடுத்துவிடும், யார் இல்லை என்பது. ஆனால் கைத்தறியாளர் காங்கிரசை வீழ்த்தினால்தானே அந்தக் கஷ்டம் போகும். காளை மாடு பால் தருமா?

✽

---

10-ம் பக்கத் தொடர்ச்சி

"எத்தனை புத்தி தீட்சணியம். ஜாண் பணத்துக்கு முழம்புத்தி என்பார்களே அது உண்மையாகத்தான் இருக்கிறது" என்று எண்ணிக்கொள்வான். பொல்லாத உலகமிது! பொய்யுரைக்கும் தத்துவம் பேசப்படும் உலகம்!!

"எட்டுக்கல் தொலைவுன்னு சொன்னிங்களே எஜமான்! பத்தரைகல் தொலைவு இருக்குதுங்க" என்று கூறுகிறான் பணியாள்.

"மடயா! நான் எட்டுக்கல் தொலைவு என்று சொன்னேன்; இருக்கலாம் என்றுதானே சொன்னேன்" என்று எஜமானர் சொற்சிலம்பம் நடத்துகிறார்.

"இருக்கலாம் என்றாலும் இருக்குது என்றாலும் ஒன்றுதானுங்களே!" என்று பணியாள் கேட்கிறான்; மரியாதையாகத்தான்.

"பைத்யக்காரா! இருக்கலாம் என்பதற்கும் இருக்குது என்பதற்கும் வித்தியாசம் இல்லையா? இருக்குது என்றால் நிச்சம் இருக்குது என்று பொருள்; இருக்கலாம் என்றால் இருந்தாலும் இருக்கலாம் இருக்காமலும் போகலாம் என்று பொருள்" என்று விளக்குகிறார். பணியாள் அவருடைய அறிவுத் தெளிவை எண்ணி வியப்படைகிறான். பிறகோர் நாள் அதே எஜமானர், இருக்கும் என்றாலும் இருக்கலாம் என்றாலும் இரண்டுக்கும் ஒரே பொருள்தான் என்று பேசக் கேட்டால், பதறுவான்; ஆனால் பணியாள் கேட்கமுடிகிறதா, இப்படி மாறி மாறிப் பேசுகிறீர்களே என்று! பொல்லாத உலகம்! பொருளற்றது பேசினாலும் பொறுத்த மற்றது பேசினாலும் பொருள் உடையார் பேசினால் பொறுத்துக் கொள்ளவேண்டிய நிலையில் உள்ள உலகம்.

அப்போது அப்படிச் சொன்னீர்களே! இப்போது இப்படி மாற்றிப் பேசுகிறீர்களே என்று, பெரியவர்களை — பெரிய இடத்தில் உள்ளவர்களைப் பார்த்துக் கேட்டுவிட முடிகிறதா!

இதோ நமது முதலமைச்சர் இருக்கிறார் கனம். பக்தவத்சலனார்.

இவர் இரண்டாண்டுகளுக்கு முன்பு ஆட்சி மொழிகள் சட்டம் வந்தபோது, சட்ட நிபுணர்கள் மே May என்ற சொல் கூடாது ஷால் Shall என்ற சொல்தான் வேண்டும் என்று வாதாடினார்கள், தக்க ஆதாரத்துடன்; மன்றாடினார்கள், பக்தவத்சலனார் என்ன சொன்னார் அப்போது? மே என்றாலும் ஷால் என்றாலும் ஒன்றுதான்; ஒரே பொருள்தான் என்று பேசினார். எப்படி என்று கேட்க முடிந்ததா?

இப்போது அதே முதலமைச்சர் அந்தச் சட்டத்தில் உள்ள மே என்பதை எடுத்துவிட்டு ஷால் Shall போடவேண்டும் என்கிறார்.

அப்போது அப்படிச் சொன்னீர்கள், இப்போது இப்படிச் சொல்கிறீர்களே, ஏன் என்று கேட்க முடியுமா! அவரோ முதலமைச்சர்! எப்போது எப்படிப் பேசவேண்டும் என்று தோன்றுகிறதோ அப்போது அப்படிப் பேசுவார். அரசியல் சட்டத்தைத் திருத்துவதுதான் நல்லது; பாதுகாப்பானது என்று இதே முதலமைச்சர்தான் சொன்னார்.

இப்போது, அவரே சொல்கிறார் அரசியல் சட்டத்தைத் திருத்தத் தேவை இல்லை; ஆட்சிமொழிகள் சட்டத்தைத் திருத்தினாலே போதும் என்கிறார்.

அப்போது அப்படிச் சொன்னீர்களே! இப்போது இப்படி மாறிப் பேசுகிறீர்களே! என்று கேட்டால், என்ன சொல்கிறார்? அப்போது சொன்னேன் அப்படி; இப்போது இப்படிச் செய்தால் போதும் என்று தோன்றுகிறது என்கிறார்.

வேளைக்கு ஒரு பேச்சா! மாறி மாறிப் பேசுவதா! ஒரு திட்டவட்டமான போக்கு இருக்கவேண்டாமா? ஏன் இந்தக் குழப்பம், குளறுபடி! என்றெல்லாம் கேட்கலாம், வேறு யாராகவாவது இருந்தால்! சொல்பவரோ முதலமைச்சர்! அவரிடம் கேட்க முடியுமா, குழப்பம் ஏன் என்று!

எனக்கா குழப்பம்! உனக்குக் குழப்பம்! உன் கும்பலுக்கே குழப்பம்! என்று பேசுவார்; கேட்டுக் கொள்ள வேண்டும்; வேறென்ன செய்ய முடியும்.

பொல்லாத உலகமிது, பெரிய இடத்திலுள்ளவர்கள் எப்படிப் பேசினாலும், அதிலே எத்தனை குழப்பம் இருந்தாலும், பொறுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ள உலகம்

★

# கவித் துளிகள்

கேடு இல்லாத விழுமிய செல்வம் கல்வி என்கிறார் திருவள்ளுவர். இன்றுகூட எல்லாரும் கல்வியின் பெருமையை வாய்வலிக்கப் பேசுகின்றனர். கற்றால் நல்லது. கல்வி கரை சேர்க்கும் என்றெல்லாம் நம்புகின்றனர். மாடு, மனை; மக்கள் சுற்றம் எதுவும் நிலையல்ல. கல்வியே நிலையானது என்றெல்லாம் எடுத்தியம்பப்படுகிறது. ஆனால் பொற்களந்தைப் படிக்காசுத் தம்பிரான் என்னும் புலவரோ படிப்பால் துன்பமே வந்துற்றது என்று பாடுகின்றார். வறுமையில் வாடிய புலவர் முன்னே அடுக்கடுக்காகக் குவிந்திருந்த ஏடுகள் எரிச்சலை மூட்டின போலும்! இத்தனை ஏடு இருக்கிறது, ஆனால் ஏதும் பயன் இல்லையே இவற்றால், என்று எண்ணுகின்றார்; மனம் நொந்து பாடுகின்றார். ஏதுக்கு இந்தப் படிப்புப் படித்தோமோ என்று ஏங்குகின்றார்.

அட கெடுவாய், பல தொழி
லும் இருக்கக் கல்வி அதி
கம் என்றே கற்றுவிட்டோம்
அறிவில்லாமல்—

செய்து பிழைப்பதற்கென்று எத்தனையோ தொழில்கள் உள்ளன, இந்த உலகத்தில். அவற்றையெல்லாம் விட்டுவிட்டு கல்வி (அதிகம்) சிறப்புடையது என்று அதைக் கற்றோம்—ஆனால் இப்போதுதான் தெரிகிறது, அது எத்தனை பெரிய தவறு என்பது, அறிவில்லாமல் கற்றுவிட்டோமே என்று கவலைப் படுகின்றார்.

திடமுள மோகனம் ஆட,
கழைக் கூத்தாடச்
செப்பிடு வித்தைகளாடத்
தெரிந்தோமில்லை.

எத்தனை எரிச்சல் பாருங்கள் அவருக்கு. மாயமந்திரங்கள் கற்று, அவற்றால் மக்களை மயக்கியாவது பிழைக்கலாம். கழைக் கூத்து ஆடிடலாம், செப்பிடு வித்தைகள் செய்திடலாம், ஆனால் இது ஒன்றையும் இதுகாறும் தெரிந்துகொள்ளவில்லையே—இனி என்ன செய்வது என்ற கவலை—ஏக்கம்—தான் இப்போது அவருக்கு இருப்பது. எத்தொழிலேனும் சரி. வயிற்றுக்கு உணவு கிடைத்தால், செய்யத் தயார் என்ற நிலைக்கு வந்துவிட்டிருக்கிறார் அவர்.

சனியான தமிழை விட்டுத்
தையலார் தம் இடமிருந்து
தூது சென்று பிழைத்தோம்
இல்லை.

கற்ற தமிழை,—விரும்பிக் கற்ற தமிழை—சனியான தமிழை என்று சொல்லும் அளவு அவருடைய மனம் வேதனைப்பட்டிருக்கிறது. அதனால் அவர் அதனை விட்டிருந்தாலும் நன்றாய் இருந்திருக்கும் என்கிறார். அதோடு மட்டுமா? தையலர்பால் தூதுவராகவும் பணியாற்றத் தாம் தயார் என்கிறார். என்ன செய்வார் அவர்? பசி வந்திடப் பத்தும் பறந்து போகுமாமே—அழி பசி, அத்தனையும் அழிக்கும் என்கிறார்கள் அல்லவா?

குடிப் பிறப்பு அழிக்கும்
விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்
புணை விடூஉம்,
நாணணி களையும்,
மாணெழில் சிதைக்கும்
பசிப்பிணி என்னும் பாவி.

புலவர் மட்டும் அந்தப் பொது விதிக்கு விலக்காகிட முடியுமோ? எனவேதான் அவர் 'சனி'யான தமிழை விட்டுத் தூது சென்றாவது பிழைக்கவேண்டும் என்று எண்ணுகின்றார்.

எத்தனை நொந்திருந்தால், பாவம் அவர் இத்தனை இரக்கமாகப் பாடல் எழுதுவார்?

✻

உள்ளம் நொந்து வருந்திப் பாடிய அனுபவம் ஔவையாருக்குக்கூட இருந்திருக்கிறது. ஔவையார் என்றதும் சங்க காலத்தில் இருந்த அந்த ஔவையாரை நினைத்துக் கொள்ள வேண்டாம். நான், இப்போது குறிப்பிடுவது, நேற்றோ அதற்கு முன்நாளோ இருந்து எளிய பாடல்களை இயற்றிய இனிய ஔவையாரைத்தான். அந்த அம்மாளும்,

விரகர் இருவர்
புகழ்ந்திடவே வேண்டும்,
விரல் நிறைய மோதிரங்கள்
வேண்டும்-அரையதனில்
பஞ்சேனும் பட்டேனும்
வேண்டும், அவர் கவிதை
நஞ்சேனும் வேம்பேனும் நன்று.

என்று பாடுகின்றார். 'பாட்டு' என்றதும், சொல்கண்டு, பொருள் கண்டு சுவைகாண்பது முறை. ஆனால் உலகம் அப்படிக்கு இல்லை. யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதில் ஆர்வம் காட்டுவது இல்லை. எவர் வாய் கேட்கிறோம் என்பதைத் தெரிந்துகொண்ட பிறகே மதிக்கிறது. 'பெரியவர்'கள் கூறினால் ஆகாஅருமை என்பதும், அதையே பெரியவர்களாக வேண்டியவர்கள் கூறினால் 'சரிதான்' என்று விடுவதும் உலக வழக்கம். அந்தக் கொடிய வழக்கம் ஔவையாரையும் வாட்டியிருக்கிறது. அதனால்தான் அவர், விரல் நிறைய மோதிரங்கள் வேண்டும், அரையில் பஞ்சேனும் பட்டேனும் வேண்டும், அவை இருப்போர் கூறும் கவிதை நஞ்சேனும் வேம்பேனும் நன்று நன்று என்று பாராட்டுவர் என்கிறார்.

இவ்வளவு நொந்த நிலையிலும் ஔவையார் உள்ளம் சலியாமல் பாட்டுக்களைப் பொழிந்து தள்ளுகின்றார். அவற்றிலே சில கட்டுக் கதைகளுக்கு ஆதாரமாக அமைகின்றன, சில பாடல்கள் நல்ல கருத்துக்களைக்கொண்டு விளங்கக் காண்கிறோம்.

ஊக்கமே ஆக்கத்திற்கு வழிகோலும் அல்லவா? உள்ளத்திற்கு நம்பிக்கையளிக்கும் வகையில் ஔவையார் சில கருத்துக்களைக் கூறுகின்றார். நம்மால் இயலுமா, இது அரிய வித்தையாயிற்றே—மிகுந்த திறமை வேண்டுமே, இதனைச் செய்ய, எனக்கேது அந்தத் திறமை என்றெல்லாம் எண்ணிச் சோர்ந்துவிடாமலிருக்க இயற்கையில் உள்ள சில நடைமுறைகளை எடுத்துக் காட்டுகின்றார். அவற்றைக் கண்டேனும் மனம் ஊக்கம் கொள்க எனக் கூறுகின்றார்.

வான்குருவியின்கூடு வல்லரக்குத்
தொல்கறையான்
தேன்சிலம்பி யாவர்க்கும்
செய்யரிதால்—

இவை சாதாரணமான பொருள்கள் தாம். தூக்கணுங்குருவியின் கூடு, கறையான் புற்று, தேன்கூடு இவற்றை மனிதனுல் எளிதில் செய்து முடிக்க இயலாது. ஆனுல் குருவி போன்ற அற்ப உயிரினம் அவற்றை எளிதில் முடித்திடுகின் றன. அதனுல் அவை, தாம் பெரி யவை என்று கருதிக்கொள்ளக் கூடாது என்கிருர்.

யாம் பெரியம்
வல்லோமே என்று வலிமைசொல
வேண்டாம் காண்
எல்லார்க்கும் ஒவ்வொன்றும்
எளிது.

ஒவ்வொருவர்க்கும், ஒவ்வொன்று எளிதாகச் செய்து முடிக்கப்படும்– எனவே இதனைச் செய்தமையால் யான் பெரியவன் என்று பெருமை கொள்ளல் வேண்டாம் என்று எச்சரிக்கை செய்கின்ருர்.

திறமைகள் வளர்த்துக்கொள் எப்பட வேண்டியவைதாம், அவை யாரோ கொடுத்துப் பெறவேண்டிய வரங்கள் அல்ல என்று கூறு கின்ருர்.

சித்திரமும் கைப்பழக்கம்
செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி
மனப்பழக்கம் நித்தம்
நடையும் நடைப்பழக்கம்,

என்றுகூறித் திறமைகளை வளர்த் துக்கொள்வதற்குத் துணையாகவும் தூண்டுதலாகவும் இருக்கிருர். ஆனுல் பண்புகள் (சிலவேனும்) இயற்கையில் அமைந்திருக்கவேண் டியவை என்பதையும் மறவாமல் நினைவூட்டுகின்ருர்.

நட்பும் தயையும் பிறவிக்குணம் என்று கூறுகின்ருர். திறமை, உட லால், அறிவால் அமைவது; பண்பு, உள்ளத்தில் ஊறுவது. இந்த வேறு பாட்டை உணர்ந்துள்ள புலவர், அதனைத் தெளிவாக்கி, திறமை யைப் பெறலாம் என்றும், பண்பு இயற்கையிலேயே அமைந்திருக்க வேண்டும் என்றும் கூறிடுகிருர்.

இவர் கூழுக்கும் உப்புக்கும்கூட பாடல் புனைவார் என்பர். ஆனுல் ஒரு பாட்டில், கோடி கோடியாகப் பாடித்தள்ளுகிருர். என்ன கோடி கள் அவை?

மதியாதார் முற்றம் மதித்து
ஒருகால் சென்று மதியாமை
கோடி பெறும்.
உண்ணீர் உண்ணீர் என்று
உபசரியார் தம்மனையில்
உண்ணுமை கோடிபெறும்.
கோடி கொடுத்தும் குடிப் பிறந்
தார் தம்மோடு கூடுதல்
கோடிபெறும்.
கோடானுகோடி கொடுப்
பினும் தன்னுடைய நாக்
கோடாமை கோடிபெறும்.

எல்லாவற்றையும் விட மேலான தாகவும் சிறப்புடையதாகவும் இவர் கூறுவது வாக்குத் தவருத தன்மை யாகும் தன்னுடைய நா (சொல்) கோடாமை (தவருமை) நல்லது என்கிருர். அது ஒருகோடி பொன் னுக்குச் சமம் என்று கூறுகின்ருர்.

✱

குடும்பக் கட்டுப்பாடு பிரச்சாரத் திற்காக அரசினர் பல மாதிரியான விளம்பரங்களைச் செய்து வருகின் றனர். நாள்காட்டி வெளியிடுவது, செய்திப்படம் எடுப்பது — துண்டு வெளியீடுகள் விடுப்பது என்று பல முறைகளில் அந்தப் பிரச்சாரம் அமைகிறது. அவர்களுடைய பிரச் சாரத்திற்கு ஏற்ற தன்மையிலே ஒரு பாடல், பட்டினத்துச் சாமிகள் என்ற புலவர் பாடியது இருக்கிறது.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல்
போலப் புலபுலஎனக் கலகல
எனப் புதல்வர்களைப்
பெறுவீர்,
காப்பதற்கும் வகையறியீர்,
கைவிடவும்மாட்டீர் கவட்டுத்
தொன் மரத்திடுக்கில் கால்
நுழைத்துக் கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த
பேய்க் குரங்குபோல அகப்
பட்டீர் கிடந்துழக அகப்பட்
டீர் நீரே!

அளவான குடும்பம் என்று இரண்டு மூன்று குழந்தைகள் உள்ள ஒரு குடும்பத்தின் படத்தைப் போட்டு நாள்காட்டி அச்சிடுகின் ருர்கள் அல்லவா, அதுபோல், ஒரு குரங்கு ஆப்பு அசைத்துவிட்டுத் திண்டாடுவதுபோலப் படம்போட்டு, கீழே இந்தப் பாடலையும் எழுதி ஒரு நாள் காட்டியோ, துண்டு வெளி யீடோ வெளியிடலாம்! தங்கள் கருத்துக்குத் தமிழ் இலக்கியச் சான்று இருக்கிறது என்றுகூட பெருமை கொள்ளலாமே!

✱

களபம், மாதங்கம், வேழம், பகடு, கம்பமா, இத்தனை சொற்களும் ஒரே பொருளைக் குறிப்பன. யானை யைக் குறிப்பிடுவதற்கு உள்ள சொற்கள் இவை. ஆனுல் இந்தச் சொற்களுக்கு வேறு பொருளும் உண்டு, களபம் என்ருல் சந்தனம் என்றுகூட பொருள். அதேபோல் மாதங்கம், என்பது மா—தங்கம் என்று பிரிக்கப்பட்டால் மிகுந்த பொருள் என்றும், பொருள்படும். வேழம் என்பது கரும்பையும் குறிக் கும். பகடு என்பது எருதையும் உணர்த்தும், கம்பமா என்ற சொல் கம்பு — மாவு என்றும் ஆகும். இந்தச் சொற்களைக் கொண்டு புலவர் விளையாடுகின்ருர். பாணனும் அவன் மனவியும் உரை யாடுவதுபோல பாட்டு.

'இம்பர் வான் எல்லை இராம
னையே பாடி என் கொணர்ந்
தாய் பாணு நீ?''
என்ருள் பாணி,
"வம்பதாம் களபம்''
என்றேன்;
"பூசும்'' என்ருள்
"மாதங்கம்'' என்றேன்,
"யாம் வாங்தேம்'' என்ருள்.
"பம்புசீர் வேழம்'' என்றேன்;
"தின்னும்'' என்ருள்.
"பகடு'' என்றேன்;
"பழனம் தன்னை உழும்''
என்ருள்.
"கம்பமா'' என்றேன்:
"களி ஆம்'' என்ருள்.

பாணனுக்கு ஏற்ற பணிதானே? ஆனுல் முடிவில் வெற்றி பாணனுக் குத்தான். என் சொல்லி வெற்றி பெறுகிருன்? யானைக்குத் துதிக்கை இருப்பது நினைவுக்கு வருகிறது. அதைக் கூறுகின்ருன்.

"கைம்மா'' கையையுடைய மா (விலங்கு) என்ருன். அவள் "சும்மா'' கலங்கினுள் என்று கூறிப் பாட்டை முடிக்கிருர் புலவர். இந்த அழகிய பாடலைப் புனைந்த புலவருக்குக் கண் பார்வையில்லை. எனினும் பாட்டிலே சுவை குறையவில்லை! அந்தகக்கவி வீரராகவ (முதலியார்) என்னும் பெயர் கொண்ட புலவர் அவர்.

✱

## சிக்கனம்-தர்பாரில்!

தேவையற்ற ஆடம்பரம் கூடாது வீண் செலவு கூடாது சிக்கனம் வேண்டும் — என்று சவுதி அரேபிய மன்னர் கருதுகிறார்!




அவருடைய அந்தப்புரத்திலுள்ளவர்கள், விலையுயர்ந்த காடிலாக் மோடார்களை உபயோகித்துக்கொண்டு வருவது வீண் செலவு என்று மன்னர் கருதி, அந்தப்புரத்து ஆரணங்குகள் இனி சைக்கிள்களைப் பயன்படுத்தவேண்டும் என்று உத்திரவு பிறப்பித்துள்ளார்.

இதற்காக இப்போது 50-சைக்கிள்கள் வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

*

## வெறித்தனம்

மலேஷியா பிரதமர் துங்கு அப்துர் ரஹிமான் அவர்களைக் கொலை செய்துவிடப்போவதாக மிரட்டி ஒரு கடிதம் வந்திருக்கிறதாம்.

இந்தக் கடிதம், தொடர்ந்து விஷமத்தனம் செய்துகொண்டிருக்கும் இந்தோனீஷியாவின் வேலை என்று தெரிகிறது.

இந்த மிரட்டல் கடிதம் இந்தோனீஷியாவிலிருந்தே அனுப்பப்பட்டிருக்கிறது.

துங்குவை, ஏப்ரல் 10-ம் நாள் கொலை செய்யப்போவதாக அந்த மிரட்டல் கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறதாம்.

துங்குவும் அவருடைய சர்க்காரும் இந்த மிரட்டல் கடிதத்தைப் பொருட்படுத்தவில்லை என்றுதெரிவிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், இந்தோனீஷியாவில், எவ்விதமான வெறித்தனம் மூட்டப்பட்டிருக்கிறது என்பதற்கு இந்த மிரட்டல் கடிதம் ஒருசான்று என்று அனைவரும் கருதுகின்றனர்.

*

## முற்றுகிறது!

டாக்டர் சுகர்ணோவின் மூளை சுறுசுறுப்பு மிக்கது. உலகினர் பரபரப்பு கொள்ளத்தக்கவிதமாக எதாவது பேசுவதும் செய்வதும் அவருடைய வாடிக்கை.

இந்தோனேஷியாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள பெருங்கடல், இந்தியப் பெருங்கடல் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

இது சுகர்ணோவுக்குப் பிடிக்கவில்லை. உடனே ஒரு உத்திரவு பிறப்பித்தார் — இனி இந்தப் பெருங்கடலுக்குப்பெயர் இந்தோனீஷியப் பெருங்கடல் என்பதாக.

இந்தோனிஷியாவின் தன்மானம் இதனால் உயருகிறதாம்!

இப்போது டாக்டர் சுகர்ணோ வேறோர் 'புரட்சி' எண்ணத்தை வெளியிட்டுள்ளார்.

இந்தோனேஷியா என்றபெயர் அவருக்குப் பிடிக்கவில்லையாம்! காரணம்? இந்தோ என்ற சொல் இந்தியா என்ற பெயரைக் கவனப்படுத்துகிறதாம். அதனால் இந்தியாவுடன் தொடர்பு கொண்ட ஒரு பூபாகம் என்று தனது நாட்டைப் பற்றி சிலர் எண்ணிக்கொள்கிறார்களாம். இது தன்மானக்குறைவாக இருக்கிறபடியால் உடனே இந்தோனேஷியா என்ற பெயரை மாற்றி, புதுப் பெயரிடும்படி சுகர்ணோ கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த விதமாக டாக்டர் சுகர்ணோவின் தேசீயம் முற்றிக் கொண்டு இருக்கிறது!!

*

## நோஞ்சான்கள்

அளவுக்கு மீறிய உணவு மிகக் குறைவான உடற்பயிற்சி ஆகிய காரணங்களால் ஆஸ்திரேலியா நோஞ்சான்களைக் கொண்ட நாடாகிவிடும் ஆபத்து உள்ளது.

ஆஸ்திரேலியாவில் 30 சதவிகிதச் சாவுகள், இருதய நோய். அது சம்பந்தப்பட்ட நோய்கள் ஆகியவற்றால் ஏற்படுகின்றன. இவை சோம்பேறித்தனத்தாலும் உடல் எடை அளவு மீறிப் போவதாலும் ஏற்படுகின்றன.

'இந்த மரண விகிதம் மேலும் அதிகரித்து வருகிறது என்று தேசிய உடல் ஆரோக்கியக் கவுன்சிலின் நிர்வாக அதிகாரி கோர்டான் யங் கூறினார்.

தற்காலப் பள்ளி மாணவர்களின் பழக்க வழக்கங்கள் காரணமாக எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா நோய்வாய்ப்பட்டவர்களைக் கொண்ட நாடாக்கிவிடும் என்று அவர் எச்சரித்தார். 'பள்ளிகளில் இருக்கும்போது பெரும்பாலான நேரம் மாணவர்கள் கூனிக் குறுகி உட்கார்ந்திருக்கின்றனர். வீடு திரும்பியவுடன் டெலிவிஷன் செட்டுகள் முன்பாக நாற்காலிகளில் சொகுசாசு உட்கார்ந்து பொழுதைப் போக்கின்றனர்' என்றார் அவர்.

மாணவர்களில் பலர் பள்ளிக் கூடங்களுக்குக் காரில் போய் வருகின்றனர். இது அவர்களை மேலும் உடலை அலட்டிக் கொள்ளாதவர்களாக ஆக்குகிறது. ஆஸ்திரேலியர்கள் தங்களுடைய கிரிக்கெட் வீரர்கள், டென்னிஸ் ஆட்டக்காரர்கள், நீச்சல் வீரர்களின் சிறப்பை எண்ணியபடி சும்மா உட்கார்ந்து இருக்கிறார்கள்' என்றும் யங் கூறினார்.

*




சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.